**P.L.RAJ IAS & IPS ACADEMY**

**Building Bureaucrats Since 2006**

## July 31, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்துக்கு அடுத்த 15 நாள்களுக்கு 4.5 டிஎம்சி காவிரி நீரைத் திறந்துவிட கர்நாடக மாநிலத்துக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.
   i. தண்ணீர் பற்றாக்குறையைக் காரணம் காட்டி தமிழகத்துக்கு நீர் வழங்க கர்நாடகம் மறுப்பு தெரிவித்துவரும் நிலையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 54-ஆவது கூட்டம் அவசர கூட்டமாக புது தில்லியில் நடைபெற்றது. ஆணையத் தலைவர் எஸ். கே. ஹல்தர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கர்நாடக அதிகாரிகள் நேரடியாக கலந்து கொண்டனர். தமிழக அதிகாரிகள் இணைய வழியில் பங்கேற்றனர்.
   ii. முன்னதாக, கடந்த 22-ஆம் தேதி நடைபெற்ற 53-ஆவது கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில்,16.02.2018 அன்று வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி விகிதாசார அடிப்படையில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை கர்நாடகம் திறந்து விடுமாறு ஆணையம் உத்தரவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.
   iii. ஆனால், குறைவான மழைப் பொழிவு மற்றும் வறட்சியைக் காரணமாகக் காட்டி, குறிப்பாக பெங்களூரு நகரின் குடிநீர்த் தேவைக்காக நீர் தேவைப்படுவதாக கர்நாடகம் தெரிவித்தது.
   iv. இதையடுத்து, மழைப்பொழிவு மற்றும் நீர்வரத்தை மேலும் ஒரு வாரகாலம் கண்காணிக்கவும், அதன் பின்னர் மாநிலங்கள் முன்வைக்கும் கருத்துகள் மற்றும் நீரியல், வானிலை சார்ந்த சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய விகிதாசார நீர்ப் பங்கு குறித்து காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என ஆணையம் முடிவு செய்து கூட்டத்தை ஒரு வாரத்துக்கு ஒத்திவைத்தது.
   v. அதன்படி, கடந்த செவ்வாய்க்கிழமை (ஜூலை 28) கூடிய காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு, தமிழகத்துக்கு நாள் ஒன்றுக்கு 3,500 கனஅடி வீதம் 15 நாள்களுக்கு காவிரி நீரை கர்நாடகம் திறந்துவிட பரிந்துரைத்தது.
   vi. இதைத் தொடர்ந்து, வியாழக்கிழமை நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அவசர கூட்டத்தில் தமிழகமும், கர்நாடகமும் தங்களது நிலைப்பாட்டை எடுத்து வைத்தன. இருதரப்பு விளக்கங்களையும் கேட்ட

பின்னர், தமிழகத்துக்கு நாள் ஒன்றுக்கு 3,500 கன அடி வீதம் 15 நாள்களுக்கு 4.5 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட உத்தரவிடப்பட்டதாக மேலாண்மை ஆணையத் தலைவர் எஸ். கே. ஹல்தர் பின்னர் தெரிவித்தார்.

vii. உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், இதை அமல் படுத்தாவிட்டால் அது நீதிமன்ற அவமதிப்பாகும் எனவும் எஸ். கே. ஹல்தர் கூறினார்.

2. ‘எல் நினோ’ எனும் காலநிலை மாற்ற நிகழ்வால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை முன்கூட்டியே மதிப்பீடு செய்து, அறிவியல் அடிப்படையிலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையின் கீழ் பேரிடர் மேலாண்மைக்கான நிபுணர் ஆலோசனைக் குழுவை அமைத்து முதல்வர் ச. ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

i. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'பசிபிக் பெருங் கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடலின் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பைவிட அதிகரிப்பதால் உருவாகும் எல்நினோ நிகழ்வு, உலகளாவிய மழைப்பொழிவு மற்றும் வானிலை அமைப் பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக 2 முதல் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை உருவாகும் எல் நினோ, கடலின் மேற்பரப்பு வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கு மேல் உயரும்போது தீவிரமாகக் கருதப்படுகிறது.

ii. 2026-ஆம் ஆண்டில் தீவிர எல் நினோ உருவாகும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக வானிலை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதனால் தென்மேற்குப் பருவ மழை குறையவும், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் அதீத மழை, வெள்ளம் உள்ளிட்ட தீவிர வானிலை நிகழ்வுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

iii. இந்தச் சூழ்நிலையை ஆய்வு செய்ய ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில், அண்ணா பல்கலைக்கழக காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தின் தலைவர் பேராசிரியர் எஸ்.கண்மணி, சென்னை ஐஐடியின் குடிசார் பொறியியல் துறை நீரியல் மற்றும் நீர்வளப் பொறியியல் ஆய்வக பேராசிரியர் பாலாஜி நரசிம்மன், உலக வளங்கள் நிறுவனத்தின் காலநிலை மீள்திறன் பிரிவு இயக்குநர், தமிழ்நாடு காலநிலை மாற்ற

ஆளுமைக் குழு உறுப்பினரான அறிவுடை நம்பி அப்பாதுரை, தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவன ஆலோசகரும், நிலையான மற்றும் கால நிலை மீள்திறன் கொண்ட நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் குழு நிபுணர் உறுப்பினருமான ரமேஷ் ராமச்சந்திரன், மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டுக் குழு நிபுணர் உறுப்பினர் ஆர். வெங்கடேசன், சுகந்தி தேவதாசன் கடல்சார் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் ஜே.கே. பேட்டர்சன் எட்வர்ட், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மூத்த மேலாளர் ஆர். பிர தீப் ஜான் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

iv. இந்தக் குழு மாநிலத்தின் மழைப் பொழிவு; வறட்சி மற்றும் வெள்ள அபாயங்களைத் தொடர்ந்து கண்காணித்து, பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகளை அடையாளம் காணுதல், முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல், அறிவியல் அடிப்படையிலான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பேரிடர்களை எதிர்கொள்ள அரசின் தயார் நிலையை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும்.

v. குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பொதுமக்களின் உயிர், வாழ்வாதாரம் மற்றும் உள்கட்டமைப்புகளைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

3. எவரெஸ்ட் சிகரத்துக்கு அருகே அமைந்துள்ள திபெத் பீடபூமி பகுதியின் லசா நகரில் செயல்படும் பல்கலைக்கழகத்தில், அதி நவீன ட்ரோன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை சீனா அமைத்துள்ளது.

i. கடல் மட்டத்திலிருந்து 4,000 மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் அமைந்துள்ள திபெத்தில் ஆக்சிஜன் அளவு குறைவாக இருப்பதுடன், கடும் குளிரும், கரடுமுரடான நிலப்பரப்பும் காணப்படுகிறது. ட்ரோன் தொழில்நுட்பத்தைச் சோதிப்பதற்கும், சவாலான வானிலைக்கு ஏற்ப அவற்றை மேம்படுத்துவதற்கும் இச்சூழல் மிகவும் ஏற்றது என சீன பொறியாளர்கள் கருதுகின்றனர்.

ii. இந்த மையத்தின் செயல்பாடுகள் முறைப்படி தொடங்கியுள்ளன. இங்கு எல்லை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புவியியல் கண்காணிப்புக்குத் தேவையான பிரத்யேக ட்ரோன்கள் தயாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. காங்கோ குடியரசில் அதிவேகமாகப் பரவி வரும் எபோலா நோய்த் தொற்றுக்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1,500-ஐ கடந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் உயிரிழப்புகள் 50 சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

    i. அண்மை நிலவரப்படி, மொத்தம் 3,442 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 1,521 பேர் உயிரிழந்தனர். தற்போது 797 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்; 615 பேர் குணமடைந்துள்ளனர்.
    ii. கடந்த மே 15-இல் அறிவிக்கப்பட்ட இந்த நோய்த் தொற்றில் 'புண்டிபுக்யோ' பரவிவரும் வகை எபோலா தீநுண்மிக்கு அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் ஏதுமில்லை என்பதால், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகக்குறுகிய காலத்தில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

5. அமெரிக்காவின் மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வ், தனது வட்டி விகிதங்களை மாற்றமின்றி 3.50 முதல் 3.75 சதவீதம் என்ற அளவிலேயே நீட்டிப்பதாக அறிவித்துள்ளது.

    i. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அமெரிக்க பங்குச் சந்தைகளில் இருந்த வீழ்ச்சிப்பயம் சற்றே தணிந்தது. டவ் ஜோன்ஸ் மற்றும் நாஸ்டாக் குறியீடுகள் ஆரம்பகால சரிவிலிருந்து மீண்டு, குறைந்த இழப்புடன் வர்த்தகமாயின. மறுபுறம், தங்கம், வெள்ளி விலை சற்று அதிகரித்தது.
    ii. அமெரிக்க மத்திய வங்கியின் புதிய தலைவராக கெவின் வார்ஷ் பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற 2-ஆவது 'எஃப்ஓஎம்சி' குழு கூட்டத்திலும் வட்டி விகிதம் மாற்றமின்றித் தொடர முடிவெடுக்கப்பட்டது. அமெரிக்காவில் பணவீக்கம் மத்திய வங்கியின் நடுத்தர கால இலக்கான 2 சதவீதத்தை விட தொடர்ந்து அதிகமாக இருந்து வருவதால், இந்த எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
    iii. அதேநேரம், இம்முடிவுக்குக் கூட்டத்தில் முழுமையான ஒருமித்த கருத்து எட்டப்பட வில்லை. 9 உறுப்பினர்கள் வட்டி விகிதத்தை மாற்ற வேண்டாம் என ஆதரித்த நிலையில், 3 உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தனர்.
    iv. ஃபெடரல் ரிசர்வ் பிராந்தியத் தலைவர்களான பெத் ஹேமக், நீல் காஷ்கரி, லோரி லோகன் ஆகிய மூவரும் வட்டி விகிதத்தை 0.25 சதவீதம் உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.
    v. வட்டி விகிதம் மாற்றமின்றித் தொடருவதென எடுக்கப்பட்ட முடிவால்

தலைவர் கெவின் வார்ஷுக்கு குழுவிலேயே அழுத்தம் அதிகரித்துள்ள நிலையில், அடுத்த கூட்டம் செப்.15, 16 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

6. ஸ்காட்லாந்தில் நடைபெறும் கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், பாரா தடகளத்தின் ஒரே பிரிவில் இந்தியாவின் திலீப் மஹறு காவிட் தங்கமும், முகமது பொசில் வெள்ளியும் வென்று அசத்தினர்.
   i. தடகளத்தில் வெள்ளி வென்ற முரளி ஸ்ரீசங்கர், காமன்வெல்த் போட்டிகளில் நீளம் தாண்டுதலில் தொடர்ந்து இருமுறை பதக்கம் வென்ற முதல் இந்தியராக சாதனை படைத்தார்.
   ii. 3-ஆவது தங்கம்:
      - நடப்பு காமன்வெல்த் போட்டிகளில் இத்துடன் இந்தியாவுக்கு 3 தங்கப் பதக்கங்கள் கிடைத்துள்ளன. அதில் இரு பதக்கங்களை பாரா தடகள போட்டியாளர்களான திலீப், ஷர்மிளா தன்கர் (குண்டு எறிதல்) வென்று தந்துள்ளனர். பளுதூக்குதலில் மீராபாய் சானு தங்கம் வென்றுள்ளார்.

7. தடகளத்தில், ஆடவர் நீளம் தாண்டுதல் இறுதிச்சுற்றில், இந்தியாவின் முரளி ஸ்ரீசங்கர் தனது சிறந்த முயற்சியாக 8.09 மீட்டரை எட்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.
   i. ஜமைக்காவின் முன்னாள் உலக சாம்பியனான டாஜெய் கெயில் 8.15 மீட்டருடன் தங்கம் வெல்ல, ஸ்காட்லாந்தின் ஸ்டீபன் மெக்கென்ஸி 8.08 மீட்டருடன் வெண்கலப் பதக்கம் பெற்றார்.

8. ரூ.90,000 கோடியில் (8 பில்லியன் யூரோ) நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டும் திட்டத்தை இந்தியா-ஜெர்மனி இணைந்து மேற்கொள்ள இருக்கின்றன. இது தொடர்பான ஒப்பந்தம் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது. தில்லியில் இந்தியா-ஜெர்மனி தொழில்-வர்த்தக சம்மேளன கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற இந்தியாவுக்கான ஜெர்மனி தூதர் பிலிப் ஆக்கர்மன் கூறியதாவது:
   i. இந்தியாவுக்காக இரு நாடுகளும் இணைந்து ஆறாம் தலைமுறை நவீன நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டமைக்க இருக்கின்றன. சுமார் ரூ.90,000 கோடி மதிப்பிலான இந்தத் திட்டத்தை ஜெர்மனியின் தைசென்குரூப் மரைன் சிஸ்டம்ஸ், இந்திய அரசின் மசாகான் கப்பல் கட்டும் நிறுவனம் இணைந்து மேற்கொள்ள இருக்கின்றன. இது தொடர்பாக விரைவில் இரு நாடுகள்

இடையே ஒப்பந்தம் கையொப்பமாக உள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்தத்தின் முழு விவரங்களும் தெரியவரும் என்றார்.

ii. இந்த ஒப்பந்தத்தில் 6 நீர்மூழ்கிக் கப்பல்கள் வரை இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் எனத் தெரிகிறது. இதன்மூலம் இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவு நவீனமயமாவதுடன், பழைய கப்பல்களுக்கு ஓய்வு அளிக்கப்படவும் வாய்ப்புள்ளது.

iii. எதிரிகளின் ரேடார்களில் சிக்காமல் செயல்படுவது, அதிக நாள்கள் நீருக்கு அடியில் இருப்பது, கடலுக்கு அடியில் வேகமாக நகர்வது உள்ளிட்டவை இந்த நவீன நீர்மூழ்கிகளின் சிறப்பம்சங்களாகும்.